# உலக தந்தையர் தினம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 23-

உலக தந்தையர் தினத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

உலக தந்தையர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**அன்பு, பொறுப்பு, தியாகம் ஆகிய பண்புகளோடு குடும்பத்தையும், குழந்தைகளையும் காக்கும் தந்தையர் அனைவருக்கும் தந்தையர் தின வாழ்த்துகள்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### ஒன்றிய அரசின் ஆணைப்படி ஆன்லைனில் அனுமதி கொடுத்துவிட்டு – பணம் வாங்காமல்

# சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்ததாக கதைவிடும் த.வெ.க. அரசு!

## அனுமதி மூலம் மும்மொழி திட்டத்துக்கு கதவு திறப்பு!

*சென்னை, ஜூன் 23-*

*முதல்வர் விஜய் டெல்லி சென்று வந்த பின்பு தான் 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் பா.ஜ. செய்ய முடியாததை த.வெ.க. அரசு மூலம் செய்ய திட்டமிட்டுள்ளதா என்று கல்வியாளர்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஒன்றிய அரசு வகுத்த உத்தரவுப்படி, ஆன்லைனில் அனுமதி கொடுத்து விட்டு ஏதோ பணம் வாங்காமல் கொடுத்ததாக த.வெ.க. அரசு கதை விடுவதாக கல்வியாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.*

**தி.மு.க. கொண்டு வந்த சமச்சீர் கல்வித்திட்டம்!**

*தி.மு.க. ஆட்சியில் கடந்த 2006-11ம் ஆண்டுகளில் தமிழகத்தில் சமச்சீர் கல்வி திட்டம் தொடங்கப்பட்டது. அதுவரை அரசுஅரசு உதவி பெறும் பள்ளிகள் பாடத்திட்டம் ஒன்றாகவும், தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் பாடத்திட்டம் சி.பி.எஸ்.இ. சார்ந்தும் இருந்து வந்தது. அதன்பிறகு மெட்ரிக்குலேஷன் உட்பட அனைத்து பள்ளிகளும் சமச்சீர் கல்வி முறையே பின்பற்ற வேண்டும் என்ற அறிவிப்பு வந்த பிறகு தங்கள் பள்ளிகளுக்கு தனித்து அடையாளம் வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாட்டில் பல பள்ளிகள் சி.பி.எஸ்.இ. நோக்கி சென்றது.*

*அதன்பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 201116 அதிமுக ஆட்சியில் சமச்சீர் கல்வியை முடக்க பார்த்து அந்த முயற்சியும் தோல்வி அடைந்தையடுத்து அரசின் உதவியுடன் பல்வேறு பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளியாக மாறியது. அதன்படி அந்த 5 ஆண்டுகளில் மட்டும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்தது. 2021ம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்த போது ஏறக்குறைய 1800 சி.பி.எஸ்.இ. பள்ளிகளும், 13000 தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளும் இருந்தது. 200611ம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தனியார் பள்ளிகள் கட்டணம் நிர்ணயம் செய்யும் குழு ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் உருவாக்கப்பட்டு, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணம் மாற்றவும் அதை பள்ளிகளில் வெளிப்படையாக வைக்கவும் அறிவுறுத்தியது.*

**கட்டண கொள்ளை அடித்த தனியார் பள்ளிகள்!**

*மேலும் தனியார் பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாற என்ஓசி கொடுப்பதை நிறுத்தி வைத்தது. இதன் மூலம் தனியார் பள்ளிகள் கட்டண கொள்ளை நடத்தியதை குறைத்ததுடன், சி.பி.எஸ்.இ. பள்ளியாக மாறி இதை தொடர நினைத்ததும் நடக்காமல் போனது. உடனே தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு ஒன்றிய அரசை அணுகி சி.பி.எஸ்.இ. பள்ளிகள் தொடங்க தேவையான என்ஓசி கட்டுப்பாட்டை நீக்க வலியுறுத்தியது. அவர்கள் கோரிக்கையை ஏற்று கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி 20ம் தேதி ஒன்றிய அரசின் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் தொடங்க என்ஓசி இல்லாமலும் விண்ணப்பம் செய்யலாம். அவர்கள் நேரடியாக மாநில அரசுக்கு கடிதம் எழுதி 30 நாட்களில் அனுமதி வழங்க வேண்டும். தவறினால் மேலும் 15 நாள் அவகாசம் வழங்கப்படும். அதிலும் மாநில அரசு உரிய பதில் அளிக்கவில்லை என்றால் ஒப்புதல் வழங்கியதாக கருதப்படும் என்று விதிகளை ஒன்றிய அரசு மாற்றியது. ஆனாலும் தனியார்கள் பள்ளி நிர்வாகம் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாற்றுவதற்கு ஆர்வம் காட்டவில்லை. அதனால் குறைவான பள்ளிகளே சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாற்றினர்.*

**தி.முக. அரசு நிறுத்தி வைத்த என்.ஓ.சி.!**

*மேலும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் அனைத்தும் தேசிய கல்விக்கொள்கையின் படி செயல்படும். தாய்மொழி தமிழ் படிக்க வேண்டிய கட்டாயம் இல்லை, இந்தி, சம்ஸ்கிருத திணிப்பு இருப்பதால் தி.மு.க. அரசு என்ஓசி வழங்காமல் இதுவரை அதை நிறுத்தி வைத்தாக கூறப்படுகிறது. ஆனால் தற்போது அமைந்துள்ள விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு மறைமுக கூட்டணியாக பா.ஜ. மனம் நோகாமல் இருக்கும் வகையில் தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாற்ற என்ஓசி கொடுத்துள்ளது. இதன்மூலம் இனி அவர்களுக்கு என்று கல்விக் கட்டணம் நிர்ணயிக்கும் உரிமை உட்பட அனைத்தும் மாநில அரசின் அதிகார வரம்பில் இருந்து ஒன்றிய அரசு வசம் சென்று விடும். இதை மறைக்க தான் லஞ்சம் இல்லாமல் கொடுக்கப்பட்டது என்ற பிம்பம் கட்டமைக்கப்படுகிறது.*

*எனவே இந்த ஆட்சி 5 ஆண்டுகளை நிறைவு செய்யும் நிலையில் தமிழகத்தில் ஏறக்குறைய 13,000 தனியார் பள்ளிகளில் 50% பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாறி இருக்கும்.*

**முதல்வர் ஜோசப் விஜய் மீது சந்தேகம்!**

*மேலும் ஒரே நாளில் 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்து விட்டு தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையே பின்பற்றப்படும் என்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் த.வெ.க. அரசு கூறியுள்ளது. சி.பி.எஸ்.இ. பள்ளிகள் அனைத்தும் புதிய தேசிய கல்விக்கொள்கை படி செயல்படக்கூடியவை, அந்த பள்ளிகளில் இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் கட்டாயம் ஆகும். எனவே அதிகமான தனியார் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு தமிழ்நாட்டில் அனுமதி கொடுத்து அதன் மூலம் மறைமுகமாக இருமொழி கொள்கையை நீர்த்து போக செய்ய திட்டம் தான் இந்த 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கான அனுமதி என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.*

*இந்த 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அனுமதி என்பது த.வெ.க. தலைவர், முதல்வர் ஜோசப் விஜய் டெல்லி சென்று வந்த பின்பு தான் இந்த அனுமதிகள் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே கடந்த திமுக ஆட்சியால் பாஜவால் தமிழகத்தில் எதையெல்லாம் செய்ய முடியவில்லையோ அதையெல்லாம் மறைமுகமாக என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் பாஜ தமிழ்நாட்டில் தற்போது முதல்வராக பொறுப்பேற்று உள்ள ஜோசப் விஜய் மூலம் செய்ய திட்டமிட்டுள்ளதா என்று சந்தேகம் கல்வியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.*



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு ஜெர்தலாவ் கிராமத்தில் நீட் தேர்வு எழுத இருந்த மாணவி ரோஷினி (18) தூக்கிட்டு உயிரிழந்த நிலையில் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் மற்றும் மாநில மாணவர் அணிச் செயலாளர் வீரமணி ஆகியோர் இறந்த மாணவி ரோஷினியின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். உடன் மாநில நிர்வாகிகள் சுடப்பட்டி.சுப்பிரமணி, சத்தியமூர்த்தி,எம்.வீ.டி.கோபால்,ஆனந்தன், பி.கே.அன்பழகன், வழக்கறிஞர் அணி டி.சந்திரசேகர், முன்னாள் எம்.எல்.ஏ., ஜி.எல்.வெங்கடாச்சலம்,பி.கே.முரளி, மாணவர் அணி சந்தர் மற்றும் கழகத்தினர் உடன் உள்ளனர்.

# மும்மொழிக் கொள்கை எதிர்ப்பு: நாகலாந்தின் துணிச்சல் த.வெ.க.வுக்கு வருமா?

**த**மிழ்நாட்டில் 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு தடையில்லாச் சான்றை த.வெ.க. அரசு வழங்கியிருப்பதாக தனியார் பள்ளிகளின் கூட்டமைப்பு ஒன்றின் சார்பில் தலைமைச் செயலகத்திலேயே பேட்டி கொடுக்க வைத்து அரசியல் செய்கிறது ரீல்ஸ் அரசாங்கம். ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சிக்கு எதிராக பேச வைப்பதாக நினைத்துக்கொண்டு, தன்னுடைய கோழைத்தனத்தை த.வெ.க. அரசு வெளிப்படுத்தியுள்ளது.

சி.பி.எஸ்.இ, என்பது ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளாகும். அதற்கு தடையில்லாச் சான்றிதழை வழங்கக் கூடிய அதிகாரம் தற்போது மாநில அரசுகளுக்குக் கிடையாது. எந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய தீயணைப்புத்துறை சான்றிதழ் உள்ளிட்டவைதான் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கும் தேவை. இதைத்தான் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கான தடையில்லாச் சான்றிதழ் என்று த.வெ.க. அரசு உருட்டியது.

**ஒன்றிய அரசு தனது பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் கட்டாயமாக மூன்று மொழிகளைக் கற்றுத் தர வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. வருகின்ற ஜூலை மாதம் முதல் மும்மொழிக் கட்டாயம் என்று கடந்த மே மாதமே ஒன்றிய அரசு உறுதியாக அறிவித்துவிட்டது. த.வெ.க. அரசு சார்பிலான ஆளுநர் உரையில், மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என அறிவித்துவிட்டு, இந்திசமஸ்கிருத மொழிகளைத் திணிக்கும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு தடையில்லாச் சான்று வழங்கிவிட்டோம் எனப் பெருமைப் பீற்றிக் கொள்வது அதன் மோசடித்தனத்தையே காட்டுகிறது. ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ள சி.பி.எஸ்.இ. பள்ளிகளுடன் சேர்த்து, மேலும் 1000 பள்ளிகளில் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிப்பதற்கு கொல்லைப்புற வாசலை திறந்து விட்டிருக்கிறது இரட்டை வேட நடிகரான விஜய் தலைமையிலான அரசு.**

இந்தித் திணிப்புக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை நிலைநாட்டியது பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.க ஆட்சி. கடந்த 60 ஆண்டுகளில் ஆட்சிகள் மாறிய போதும் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை என்பதே உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த உறுதியைக் குலைத்து, மூன்றாவது மொழியாக இந்தியையும், அதனைத் தொடர்ந்து சமஸ்கிருதத்தையும் திணிக்க முயற்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தன்னால் தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கவே முடியாது என்பதால், தனக்கான அடிமைகள் கிடைக்கும்போது அதை நிறைவேற்ற முயற்சிப்பது அதன் இயல்பு. அதை முறியடித்தது திராவிட மாடல் அரசு. ஆனால், இப்போது மும்மொழிக் கொள்கைக்கு பின்புற வாசலை திறந்து வைத்து, சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கானத் தடையில்லாச் சான்றிதழ் குறித்து பெருமை பேசுகிறது த.வெ.க. அரசு.

**மும்மொழிக் கொள்கையை ஏற்கமாட்டோம் என்கிற தமிழ்நாட்டின் உறுதியான மொழி மரபை நீர்த்துப் போகச் செய்யும் வேலையை விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு தொடங்கியுள்ள நிலையில், இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான நாகலாந்தில் உள்ள சி.பி.எஸ்.இ. பள்ளிகளின் முதல்வர்கள் பலர் இணைந்து, தங்கள் மாநிலத்தில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது சரியல்ல என்றும், குறிப்பாக சமஸ்கிருத மொழியைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என நிர்பந்திப்பது சாத்தியமல்ல** என்றும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் எழுதியுள்ளனர் (ஆதாரம்: 3language policy not viable, say CBSE schools in Nagaland The Hindu dated 20.6.2026)

அந்தக் கடிதத்தில், நாகலாந்து மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெரிய பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த 17 வகையினர் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்குள் டஜன் கணக்கான உட்பிரிவுகள் இருப்பதையும், ஒவ்வொரு பிரிவினரும் அவர்கள் மட்டுமே அறிந்த சொந்த மொழிகளையும், பேச்சு வழக்கிலான மொழிகளையும் மட்டுமே பேசுவதால், நாகலாந்தில் சமஸ்கிருதத்தை மொழிப் பாடமாகத் திணிப்பது சாத்தியமல்ல என்பதையும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

நாகலாந்து மாநிலத்தில் நகரப்பகுதிகளிலும் மற்ற பகுதிகளிலும் உள்ள பள்ளிகளில் ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் பல மொழிகளைப் பேசுபவர்களாக இருக்கிறார்கள். தங்கள் தாய்மொழிகளாக ஆஓ, அங்கமி, சுமி, லோத்தா, கொன்யாக், சங், போம், சீலியாங், போச்சுரி,ரெங்மா, திக்கிர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தனித்தனி பழங்குடி மொழிகளைப் பேசுகிறார்கள் மாணவர்கள். தமிழ்நாடு, ஆந்திரா, மேற்குவங்கம், மராட்டியம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்கள் போல நாகலாந்து மாநிலத்திற்கென, தனிப்பட்ட தாய்மொழி கிடையாது. அவரவர் பழங்குடி மொழியுடனான இணைப்பு மொழியாக அங்கும் ஆங்கிலம்தான் இருக்கிறது.



**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

**ஒன்றிய பா.ஜ.க அரசு நாகலாந்தில் சமஸ்கிருத மொழியை மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் திணிக்காமல், நாகலாந்தை 'கூட்டு மொழிகளின் பகுதி' என அறிவித்து தங்கள் மாநிலத்தில் உள்ள சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு மும்மொழிக் கொள்கையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்** என்று அம்மாநில சி.பி.எஸ்.இ. பள்ளிகளின் முதல்வர்கள் ஒன்றிய பா.ஜ.க அரசின் கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தங்கள் எதிர்ப்பினைப் பதிவு செய்துள்ளனர்.

இருமொழிக் கொள்கை கொண்ட தமிழ்நாட்டில் இதுவரை ஆட்சி செய்த அரசுகளின் நிலைப்பாடும் இதுதான். அதுபோலவே, தமிழ்நாட்டின் தனித்துவமான மருத்துவக் கட்டமைப்பு மற்றும் மருத்துக் கல்விக்கான அனுமதி ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என்பதையும் திராவிட மாடல் அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தியது.

**மாற்றம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்துள்ள த.வெ.க. அரசு, இருமொழிக் கொள்கையை நிலை நாட்டுவதில் இரட்டை வேடம் போடுகிறது. 'நீட்' விலக்கு விவகாரத்தில் உறுதியான நிலைப்பாடின்றி இருக்கிறது. நாகலாந்து மாநில சி.பி.எஸ்.இ. பள்ளியின் முதல்வர்கள் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து துணிச்சலாகக் கடிதம் எழுதுகிறார்கள். த.வெ.க அரசோ மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டிய சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அனுமதி கொடுத்துவிட்டதாக தனியார் பள்ளிகளின் சங்கங்களைப் பேச வைக்கிறது. நாகலாந்து பள்ளி முதல்வர்களுக்குள்ள துணிச்சல் தமிழ்நாட்டை ஆளும் மாநில முதல்வருக்கு இருக்கிறதா?**

# 'நீட்' கொடுமை: ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# கழக மாணவரணி அடலேறுகள் - பல்லாயிரக்கணக்கில் அணி திரள்வீர்!